DUPLICATE

பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

விரோதிஞு (1889) ஆவணிமீ உ௳ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."


**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, ரூ. | 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | ரூ. | 9-40 |
| ,, அரைக்கலம் | ரூ. | 5-00 |
| ,, காற்கலம் | ரூ. | 3-15 |
| ,, ஒரு அங்குலம் | சதம் | 65 |

அடுத்த முறைகட்கு டி விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—ருடு. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஞூ ஆவணிமீ க௲உ (ககூஉ௩ செப்டெம்பர் ௩) திங்கட்கிழமை } இலக்கம்—க௲.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிரு அணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

யாழ்ப்பாணம்

## சைவபரிபாலனசபையாராற் பிரசுரஞ் செய்யப்பெற்ற

## புத்தக விளம்பரம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமான்து) | க0 |
| இரண்டாம் பாலபாடம் ,, | கடு |
| மூன்றும் பாலபாடம் ,, | உ0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ச0 |
| ஆறும் பாலபாடம் .... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிவிற்கற்"வகுப்பிலும் பயிலும்மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது. விளக்கத்துடன் | எடு |
| கலாமஞ்சரிவிளக்கம்(மாத்திரம்) | ௩0 |
| கிருட்டிணன்றூது, உரையுடன் | அடு |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கிள மொழிபெயர்ப்புடன்)... ... ... | கஉ |
| இலக்கண வினுவிடை.... ... ... | க0 |
| நிகண்டு கக-வதும் கஉ-வதும் ... | உடு |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | உடு |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காகிதம் ... ... ...க-உடு | |
| றவ்காகிதம்... ... ... ... | க-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | க0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | கஉ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | கஉ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | க0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ... ... ... ... ... | க0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௬ |
| குமணசரித்திரம் ,, | ௬ |
| பஞ்சாத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | க0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | க0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது ஏட்டுப்பிரதியின்படி அச்சிடப் பெற்றது... ... ... ... ... | கடு |
| மறைசையந்தாதி ... ... ... | உ0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

சபையாராலச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், M. S. துரை, பிறிற்றுனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப் பிள்ளையுடைய கடையிலும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

---


[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*South Arcot District*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

உ த் தி ர வா த மு ள் ள து.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லாஇன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னேர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய பலன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைபங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, ஜுகசாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த விர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய பலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினல் V. P. தபால்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது நெய்குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோர்ட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனேடியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

என் மேல்விலாசம்:—

மெஸ்ஸர்ஸ் ஏ எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை தென்னாற்காடு ஜில்லா.

(Y. 19).


---


## விளம்பரம்.




(M. 26.)


---


காகிநாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்,

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்,

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினுல் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.


---


Telegrams: "APPANNA', BANGALORE CITY"

## கெ. தி. அப்பண்ணு & கம்பெனி,

பெங்களூர் நகர்,
(இந்தியா).

பிரசித்திபெற்ற
### மைசூர் ஊதுவத்திகள்.

| | ரூ.அ.பை. |
|---|---|
| பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை | 0-12-0 |
| முதல் ரூபா 2-0-0 வரை. | |
| புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 1-8-0 |
| முதல் ரூபா 4-0-0 வரை. | |
| மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 1-8-0 |
| முதல் ரூபா 3-0-0 வரை. | |
| ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 5-0-0 |
| முதல் ரூபா 7-0-0 வரை. | |
| கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 5-0-0 |
| முதல் ரூபா 12-0-0 வரை. | |
| அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 1-8-0 |
| முதல் ரூபா 20-0-0 வரை. | |
| வாசனைவில்லைகள் வில்லை 1க்கு விலை ரூ. | 0-4-0 |
| முதல் ரூபா 5-0-0 வரை. | |
| புனுகு தோலா 1க்கு விலை ரூபா | 10-0-0 |
| முதல் ரூபா 12-0-0 வரை. | |
| தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா | 2-0-0 |
| முதல் ரூபா 3-0-0 வரை. | |

### கூந்தல் வளருந் தைலம்.

டில் மோஹினி ஹேர்ஆயில்புட்டி 1க்கு 0-12-0.
டஸன் 1க்கு 8-0-0.
ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0.
டஜன் 1க்கு 8-0-0.
பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி1க்கு 0-12-0.
டஜன் 1க்கு 8-0-0.
கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0.
டஜன் 1க்கு 8-0-0.

### ஓட்டோ வாஸனை வெஸண்டுகள்.

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

### சந்தன சோப்புகள்.

டஜன் 1க்கு ... ... ரூபா 6-0-0

### சந்தன மரத்தூள்.

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—

**K. T. APPANNAH & Co,**
**Bangalore City.**
(Y. 16) **(INDIA).**


---


உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

புஷ்டிக்கு கைகண்ட

## ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோனபலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஸ்வசுகத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரு. 10. 50 பில்ஸ் ரு. 4-0-0
20 பில்ஸ் ரு. 2. வி. பி. சார்ஜ் வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரு. 2.

### பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரு 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரு. 1.

**T. R.** கருப்பண பிள்ளை,
(Q. 41) வைத்தியசாலை, பழனி. S. I.

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோத்காரி ஞு ஆவணி மீ 18௨ திங்கட்கிழமை.

## தமிழ் உபாத்தியாயர்.

"அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக்கல்வி
யதிகமென்றே கற்றுவிட்டோ மறிவிலாமல்
இடமுளதோ சனமாடக் கழைக்கூத்தாடச்
செப்படிவித் தைகளாடத் தெரிந்தோமில்லை
நடமுலவே சியராகப் பிறந்தோமில்லை
சனியான தமிழைவிட்டுத் தையலார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
என்னசென்மமெடுத்துலகி லுழல்கின்றோமே".

என்று இற்றைக்குப் பலநூறு வருடங்களுக்கு முன்னர் ஒரு புலவர் தமிழ்க்கல்வி விஷயமாக யாதும் பொருளீட்டுதல் அரிதென்பதைக் குறித்துப் பாடிய செய்யுள் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பொய்யாகப்போகவில்லை. ஒரு உபாத்தியாயர் உபாத்திமைத் தொழிலைப் பார்ப்பதனால் தம்முடைய சீவியத்தை முட்டின்றிக் கழிக்க முடியாதெனக்கண்டு உபாத்திமைத் தொழிலை விடுத்து புகைரதப்பகுதியில் போட்டராக (கூலியாக)ப் பிழைப்புப் பார்க்கும்படி சென்றாரெனவும், சென்றமைக்குக் காரணம் அதனால் அதிக பொருளீட்ட முடியுமென அவ்வுபாத்தியாயர் கூறியிருக்கின்றாரெனவும் முன்னொரு சமையத்திலே மிஸ்றர் பாலசிங்கமவர்கள் கூறியிருக்கிறார். உண்மையாகச் சொல்லுகில், பிள்ளைகள் தொடக்கம் வித்தியாதிகாரிவரையில் இந்தத் தமிழ் உபாத்தியாயர்களையும் சிங்கள உபாத்தியாயர்களையும் அலட்சியஞ் செய்கின்றார்கள். கொழும்பிலுள்ள அரசினர் கல்லூரி (Royal College) யிற் கல்வி பயிற்றும் ஒரு தமிழ் உபாத்தியாயருக்கு வருட வேதனம் 240 ரூபா என வித்தியாதிகாரி (Director of Education) சிலநாட்களுக்கு முன்னர் மதிப்பிட்டிருந்தார். அதாவது இந்த உபாத்தியாயருக்கு ஒருமாச வேதனம் ரூபா 20 ஆகும். இந்த அரசினர் கல்லூரி உதவிநன்கொடைப் பணம் பெறும் மற்றுங் கல்லூரிகளுக்கு முன்மாதிரியாக வைத்து நடத்தப்படுவது.

இந்த விஷயமாக அதிக மனவருத்தத்தைத் தருவது என்னவென்றால் வேறும் 3 பெயருக்குத் தனித்தனி மாச வேதனம் 20 ரூபாவென அந்த வித்தியாதிகாரியே விதித்திருந்தார். இந்த மூன்று பேரும் தமிழ் உபாத்தியாயர்களல்லர். பின்னர் யாரென்று கேட்டால் பள்ளிக்கூடத்தில் மேசை கதிரை துடைத்துச் சுத்தப்படுத்துபவரும் அதனைப் பெருக்குபவருமாகிய கூலிகள். எனவே உபாத்தியாயருக்கும் உபாத்தியாயரும் அவர் கல்விபயிற்றும் பிள்ளைகளும் இருந்து வேலைசெய்யும் கதிரை மேசை வாங்குகளைத் துடைக்கும் கூலிக்கும் மாசவேதனம் சமமான தொகையேயாகும். இந்த விஷயத்தில் அரசாங்ககல்லூரியிலே கல்வி பயிற்றும் உபாத்தியாயர், கூலிக்காரனுடைய வேதனம் தம்முடைய வேதனத்திலும் கூடவில்லையேயென்று சிறிது மகிழ்ச்சியடைதல்வேண்டும். ஏனென்றால் நமது நாட்டிலே கல்லூரிகளையும் வித்தியாசாலைகளையும் வைத்து நடத்தும் அதிகாரிகள் இன்னும் ஒரு படி மேலே ஏறியிருக்கின்றார்கள். அவர்கள் கல்லூரி வேலைகாரனுக்குக் கொடுக்கும் வேதனத்திலும் குறைந்த வேதனத்தைத் தங்கள் கல்லூரிகளிற் சிறுவர்களுக்குச் செந்தமிழறிவூட்டி அவர்களைக் கேம்பிறிஜ் சீனியர் ஜூனியர் பரீட்சைகளிற் தமிழ்ப் பாடத்திலே சித்தி செய்யப் பயிற்றிவிடும் தமிழ் உபாத்தியாயர்களுக்கு உதவுகின்றார்கள். விஷயம் இப்படியிருத்தலால் ஸ்ரீ பாலசிங்கமவர்கள் சொன்ன உபாத்தியாயர் உபாத்திமைத் தொழிலை விடுத்துப் புகைரதப் போட்டராகச் சென்றமை புதினமன்று.

பின்னர், அரசாங்க பணபரிபாலன சங்கத்தார் (Finance Committee) தாமிட்ட மதிப்பில் தமிழ் உபாத்தியாயர் வேதனத்தை வருடம் 600 ரூபாவாக அதாவது மாசம் 50 ரூபாவாக உயர்த்தியிருக்கின்றனர்: ஆனால் இங்கேயும் வேலைக்காரன் தமிழ் உபாத்தியாயருடன் சமத்துவத்திற்கு வராமல் விடவில்லை. எங்ஙனமெனிற் கூறுதும்: நமது வித்தியாதிகாரி ஒரு கூலிக்காரனுக்கும், துப்பரவு செய்பவன் (Cleaner) ஒருவனுக்கும் வருடவேதனம் ஒருங்கு 900 ரூபா வென மதிப்பிட்டிருக்கின்றார். இந்த 900 ரூபாவில் 240 ரூபா கூலிக்காரனுக்கு உரிய வேதனம் போக, 660ரூபா துப்பரவு செய்பவனின் வேதனமாகும். எனவே இவனுக்குத் தமிழ்உபாத்தியாயரிலும் பார்க்க மாசம் 5 ரூபா மேலதிகமாகக் கொடுக்கப்படுகின்றது.

இனி, தமிழ் உபாத்தியாயர்களின் வேதன விஷயம் இங்ஙனமிருப்ப, வித்தியா பகுதியாரும் பள்ளிக்கூட அதிகாரிகளும் ஆங்கிலக் கல்லூரிகளின் தலைமை உபாத்தியாயர்களும் தமிழ்ச் சனத் தலைவரும் செந்தமிழை விருத்தி செய்தல் வேண்டும், அதுவே தாய்ப்பாஷை என்று பிரசங்கஞ் செய்யும்போதும் வியாசங்கள் எழுதும் போதும் அவற்றைக்கேட்பவர்க்கும் படிப்பவர்க்கும் பேரானந்த முண்டாகும். 'சோறும் சீலையும் இல்லாவிட்டாற் பிள்ளை போல் வளர்ப்பேன்" என்று சொன்னவன் பிரகாரமே, இவர்கள் கூற்று மதிக்கப்படும்.

## ஆன்மவிசாரம்.

(ஓர் பிராமணோத்தம ஸாது எழுதியது.)

(1903. செப்டம்பர் மீ.)

(முற்றொடர்).

விவேகத்தாலாவது குணத்தாலாவது நடையாலாவது நாகரிகத்தாலாவது பலருள்ளே தாழ்ச்சியுள்ளவனாயிருக்கும் ஒருவனை நாம் இகழுகிறோம். அவன் அப்படியிருத்தற்கு அமைந்துள்ள காரணம் யாவதேனும் உளதாயிருக்கும். புத்தி விசாரம் இல்லாமையினாலேனும் சோம்பலாலேனும் மானமின்மையினாலேனும் அவன் அப்படி இருக்கலாந்தானே. இன்னும் இவைபோலும் பல உளவாயிருக்கலாம். அவையுடைமை அவன்பேரிற் குற்றமல்ல. அவனுடைய உபாதியில் (நிலைமையில்) நாமும் இருந்தால் அவனேயிருப்போம். ஆதலால் அவன் குற்றவாளியல்லன். அவனுடைய பந்தத்தின் இயல்பு அஃது. அதனையுணராமல், நாம் அதிகம் அறிந்துவிட்டோம் என்ற மதிப்பினாலேனும், அல்லது அவன்மேல் யாதும் பொறாமையினால் அவனை அவமதிப்பாகவேனுமே அவனை நாம் நிந்திக்கிறோமாதலால் நாமே குற்றவாளி.

ஒருவன் ஒரு வியப்பான காரியத்தைச் செய்தால், அது நமக்கியலாமையினால் மதிக்கிறோம். ஒருவன் ஒரு இழிவான காரியத்தைச் செய்தால், அதில் நாம் வல்லமையுடையோம் என்பதுபற்றி அவனை அவமதிக்கிறோம். அவனொடொப்பான் அது செய்யான்.

பிறரை அவமதிக்கிறவர்களெல்லாம், தங்கள் அஞ்ஞானமாகிய விசரினாலேயே அது செய்கின்றார்கள், ஆகவே, அதற்கு யார்தாம் தப்பமுடியும்.

ஒரு குற்றத்தைச் செய்கிறவனும் குற்றவாளிதான்; அவனை நிந்திக்கிறவனும் குற்றவாளிதான்.

யாவனொருவன் யாதொரு குற்றத்தைச் செய்தானென நாம் கேள்விப்பட்டபொழுது, நாம் அதற்குச் சொல்லவேண்டிய சமாதானம்: "ஆம்! ஆம்! அவன் ஒரு ஆத்மாதானே, பந்தமுடையனவாகிய ஆன்மாக்களுக்குரிய இயற்கையைக் கடந்து புதிதான ஒரு குற்றம் அவன் செய்ததன்று" என்பதே.

சாத்தன் ஒரு ரோகத்தால் வருந்துகிறான். இதற்குப் பரிகாரமென்ன? இந்த நோய்க்கு இப்பொழுது யாதும் பரிகாரஞ் செய்தாலும் இன்னும் வர வரப் பிறப்புக்களிலெல்லாம் ரோகங்கள் வந்து கொண்டேயிருக்கும். அங்ஙனமாயின், இவை இனி வரவொட்டாமற் செய்து கொள்ளப் பரிகாரம் யாது? இந்த ரோகங்களுக்கெல்லாம் காரணம் கன்மம்; அதற்குக்காரணம் மூலமான அஞ்ஞானம்; அது தீர்ந்தால் ரோகமும் அற்றுப்போம். ஆயின், அதன் தீர்வுக்குத்தான் பரிகாரம் யாது? அது கன்மமாய்ப் பரிணமிக்க, கன்மம் ரோகமாய்ப் பரிணமித்து ஆன்மாவை வருத்த, அது முழுதும் வருந்தித் தீர்வதே அதன் தீர்வுக்கு முடிந்த பரிகாரம். நிகழ்வதெல்லாம் சரியே.

பிறர் நமக்குத் துன்பங்களை ஊட்ட ஊட்ட, அவர்களுக்கு அவை மறுமைக்குப் புசிப்பாகவும், நமக்கு அவை இப்பொழுதே புசிப்பாகவும் இருவருக்கும் அஞ்ஞானம் தொலைகின்றது. துன்பங்களை உடன்படாது மறுதலிப்பார்க்கு அவை பின்பு மறுமைக்குப் புசிப்பாகின்றன. உடன்பட்டஞான்று அஞ்ஞானம் அற்றுவிடுகின்றது.

இருமுகிறவன் அதற்குக் காரணமான நோயுடையவன். கோபம் பொறாமை களிப்பு முதலிய தீத்தொழிலுடையானும் அவற்றிற்குத் தருந்த காரணமான அஞ்ஞானமுடையன். ஆதலின் அவனை நாம் குறைகூறுவது தவறு. இருமுகிறவன் அதன் காரணம் ஒய, விடுவன். மேலையானும் அற்றனனே.

தீர்க்குணங்களை விட முழுதும் மனம் உடன்பட்டவனுக் அக்கறையற்று மறதி கொண்டவனுக்கே பயம் பயன்படும்.

ஒருவன் புலாலை ஊன் ஒழுக ஒழுகச் சுமக்கிறான். ஒரு சைவன் அதனைக் கண்டு அருவருத்து நிந்திக்கிறான். யார் குற்றவாளி? தனக்கு இயற்கையான அத்தொழிலைச் சைவனுக்காக அவன் விட்டொழித்துவிடவேண்டுமோ? அதனை அவனுக்கியற்கை என்றுணராமை சைவனுக்கு மடமை. உலக நடையாவும் இங்ஙனமே. ஒவ்வொருவனும் தான் செய்யும் ஒவ்வொன்றையும் தனக்கு நேர்த்தி என்றே செய்கிறான்.

ஒருவனுடைய இயற்கைதெரியவேண்டுமானால் அவனுக்குப் பலவித இம்சைகளைச் செய்து தெரியவேண்டும். அவரவர்க்கும் இயைய நடந்தால் எல்லாரும் நல்லவர்கள்தாம்.

ஈசுவரனிடம் நாம் ஏதும் ஒரு சுகத்தை வேண்டினால் அதற்காகத் தவஞ் செய்யச் சொல்லுவார். சுகத்தைச் சும்மா தரமாட்டார்.

இனி, அவரிடம் யாதும் ஒரு துன்பத்தைத் தரும்படி வேண்டினால், பதில்வேண்டாது சும்மா தருவார். கேட்பவன் தனக்கு அதன் நன்மையை விளங்கித் தேவைகண்டு கேட்கவேண்டும். பரீட்சைக்காய்க் கேட்பது அவமதிப்பாயிருக்கும். இதனால் துன்பமே ஆன்மாவின் உய்திக்கு நியதமானது என்பது தெரிகிறதல்லவா!

எதை நமக்கு ஈசுவரன் சும்மா தருவாரோ அதே நமக்கு இனியது. அது தான் துன்பம்.

தமக்குத் துன்பஞ் செய்கிறவர்களை உலகோர் "ஐயோ! இவன் வியபிசாரி இவன் திருடன் இவன் கோபி இவன் பொறாமையுடையவன்" என்றென் றின்னனவாகக் கண்டிக்கிறார்கள். இது எதற்காக? தங்கள் சுகத்துக்காக மேலே காட்டிய அவ்வவர்களும் வியபிசாரம் திருட்டு கோபம் பொறாமை என்பனவான இக்குற்றங்களை அற்றவர்களா யிருக்கவேண்டுமாம். தங்கள் சுகத்துக்காகப் பிறரை யோக்கியராக வேண்டு மென்னும் இழிவான இரப்பும் எளிமையான வேண்டுகோளும் இது போல்வன யாதும் இல்லை. தாமும் மற்றவர்கள் பொருட்டு இங்ஙனம் யோக்கியராகாமை யென்னை! இதென்ன பக்ஷபாதமும்!

தன்னைக் குண ஒழுக்கங்களாற் திருத்திக்கொள்ள வேண்டுமென்னும் நேட்டம் ஆகிய பக்குவம் வந்தவனுக்கே, அவனுக்காகவென ஒன்றைப் போதித்தல் தகும். அந்தப் பக்குவம் வாரதவர்களைக் கண்டிப்பதெல்லாம், கண்டிப்பவர்கள் தங்கள் நயத்துக்காக.

இவன் வியபிசாரி, இவன் திருடன், இவன் கோபி, இவன் பொறாமை யுடையவன், இவன் டம்பன், இவன் நம்மை மரியாதை செய்கின்றானில்லை என்றென்று இன்னனவாகப் பிறரைக் குறைகூறுவதெல்லாம் கூறுவாரது ஆற்றாமையைக் காட்டுகின்றது. அவர்கள் மிஞ்சினவர்களும் இவர்கள் தாழ்ந்தவர்களும் என்பதே இக்குறைக் கூற்றால் அறியக்கிடக்கின்றது. இது சிறுமை! சிறுமை!! தன் னிழிவைத் தானே புலப்படுத்துவது எவ்வளவு சிறுமை!

தனக்கென ஒன்றையும் தேவையற்றுவிட்டவன் பிறருக்கு ஒன்றைப் போதிக்கில் அதுதான் பிறர்க்காவதாயிருக்கும்.

(வரும்).

## இவர்களும் இப்படிச் செய்தாலென்ன?

பம்பாய்ச் சட்டநிரூபணசபையில் அங்கத்தவராக வருதற்கு முற்பட்டு நிற்கும் ஒருவர் சட்டநிரூபணசபையில் தாம் பேசவிருக்கும் விஷயங்களையெல்லாம் தம்மைத் தெரிவு செய்து அனுப்பும் சனங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட மந்திரமகாசபை (Advisory Council) ஒன்றை நியமித்து அந்தச் சபையாரின் அபிப்பிராயத்தை அனுசரித்தே தாம் பேசவேண்டுமென முயற்சி செய்கின்றார். இலங்கையிலே இப்பொழுது சட்டநிரூபணசபைப் பிரதிநிதிகளாகத் தாம் தெரிவு செய்யப்படல் வேண்டுமென முயற்சிசெய்துவருவோரும் தங்கள் தங்களுக்குரிய சனங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு மந்திரசபையை ஏற்படுத்தி அச்சபை வாயிலாகப் பிரதிநிதிகளைத்தெரிவுசெய்தல், தெரிவுசெய்து அனுப்பியபின் தம்மைத் தெரிவுசெய்து அனுப்பிய சனங்கள் சம்பந்தமான விஷயங்களை மேற்படி சபையாரின் அங்கீகாரத்துடன்பேசுதல் முதலிய கருமங்களைச் செய்ய முயன்றால் மிக நன்றாகும். இங்ஙனஞ் செய்வரேல் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தனுப்பும் விஷயமாக இத்துணைச் சங்கடமும் பொருட்செலவும் மனஸ்தாபமும் ஏற்படாவன்றோ.

## சமாசாரம்.

காலநிலை:—மழைக்குப் பதிலாகப் புழுதி மழையே பெய்கின்றது. கமக்காரர் விதை மழையை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். சிற்சிலவிடங்களிலுள்ள கூபங்களிலே தண்ணீர் முற்றாக இல்லாமற்போய்விட்டது. ஊரிலே பலவித நோய்கள் பரவியிருக்கின்றன.

சைவப் பிரசங்கம்:—கந்தர்மடம் கலாவிருத்திச்சங்கத்தின் ஆதரவின்கீழ் நிகழும் ருதிரோத்காரி ஞு ஆவணி மீ 17௨ ஞாயிற்றுக்கிழமை யிரவு 7 மணிதொடக்கம் 'விரதமனுட்டித்தல்' என்னும் விஷயமாக ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்களால் கந்தர்மடம்சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் ஓர் உபந்நியாசஞ் செய்யப்பட்டது. அத்தருணம் உரும்பராய்ச் சைவாங்கிலவித்தியாசாலைப் பிரதமாசிரியர் ஸ்ரீ பொ. தம்பு அவர்கள் அக்கிராசனராகவிருந்தார். யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியருளொருவராகிய கந்தர்மடம் ஸ்ரீ வி. சின்னையா அவர்களும் அக்கிராசனரும் குறிப்புரை கூறினர். தேவார பாராயணத்துடன் 9 மணிவரையிற் கூட்டம் நிறைவேறியது.

—சென்ற 10௨ ஞாயிற்றுக்கிழமையும் மேற்படி கலாவிருத்திச் சங்கத்தாரின் வேண்டுகோளின்படி அவ்வூரில் வசித்துவரும் ஓர் சாதுவால் "ஆலய வழிபாடு" என்னும் விஷயமாக எவர்களும் விரும்பப்படத்தக்க ஓர் பிரசங்கஞ் செய்யப்பட்டது. கடித.

காகிதம் ஏற்குந் தபாலாபீசு:—கிளிநொச்சியில் இந்தச் செப்டம்பர்மாதம் முதலாந்தேதி தொடக்கம் காகிதங்களை ஏற்றற்காகிய தபாற்கந்தோர் (Receiving Office) ஒன்று அரசினரால் தாபிக்கப்பட்டிக்கிறதென அறியலானோம்.

உயிருடன் புதையுண்டான்:—நாவலப்பிட்டியைச்சேர்ந்த கல்பொடைத் தோட்டத்திலே சென்றவாரம் ஒரு கூலிக்காரன் மலையை யகழ்ந்து கல்லரித்துக்கொண்டு நிற்கும்போது மேலுள்ள மலையிடிந்து அவன்மீது விழவே அவன் உயிரோடு புதையுண்டு பின்னர்ப் பிரேதமாக எடுக்கப்பட்டான்.

அரிசி யிறக்குமதி:—சென்ற ஆவணிமாசம் 18-ந் திகதியோடு முடிந்த ஒரு வாரத்திலே றங்கூனிலிருந்தும் இந்திய துறைமுகங்களிலிருந்தும் கொண்டுவந்து இலங்கையிலே இறக்குமதி செய்யப்பட்ட அரிசி 393780 மூடை. இவ்வருடம் தைமாசம் முதலாந் திகதியிலிருந்து ஆவணி மாசம் 18ந் திகதி வரையிலே மேற்சொல்லிய விடங்களிலிருந்து கொண்டுவந்து இலங்கையி லிறக்குமதி செய்யப்பட்ட அரிசி 3261575 மூடை. சென்ற வருடத்திலே மேற்படி கால எல்லைக்குள் கொண்டுவந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி 3166913 மூடை.

லபுகாமவாவி:—கொழும்புக்குக் குழாய் வழியாய்த் தண்ணீர் எடுக்கப்பட்டு வருகின்ற லபுகாம வாவியிலிருந்து மேலும் அதிக சலம் எடுப்பதற்காக அதன் அணைகள் உயர்த்தப்பட்டு வருகின்றன. இந்த வேலைகள் செய்து முடிய மூன்றரைலட்சம் ரூபாய் செலவாகுமாம். அதன்மேல் தற்போது கொழும்புநகருக்குக் கொடுபடுந் தண்ணீரிலும் நூற்றுக்கு நாற்பதுவீதம் கூட்டிக் கொடுக்கக்கூடியதா யிருக்குமாம். சென்றவாரம் இந்த அணை வேலைகளைத் தேசாதிபதியும் அவர் பத்தினியாரும் தம் பரிவாரங்களுடன் பார்த்துத் திரும்பினார்கள்.

கலியுக விவாகம்:—தற்காலத்திலே, இளம் விவாகத்தைப் பற்றிப் பலர் பலவிதமாகச் சொல்லிக் கொள்ளுகின்றனர். ஆனால் சென்ற வியாழக்கிழமை (23—8—23) கம்பளையைச் சேர்ந்த சின்னக்காவத்தை (Orion) என்ற தோட்டத்தில், பதினொருவயதுள்ள (புட்பவதியாகாத) ஒரு வள்ளுவச்சிறுமிக்கும் இருபத்திரண்டு வயதுள்ள ஒருவள்ளுவ வாலிபனுக்கும் விவாகம் சிறப்புற நிறைவேறிற்று. இந்த விவாகமன்றோ கலியுகவிவாகமாகும், இதுவன்றோ கலிகால வித்தையாகும். இளம்விவாகத்தைப்பற்றி வாதாடும் நண்பர்கள் இதனைச் சிறிது நோக்குவார்களாக —கடித.

சென்றவருடத்தில் மோட்டர்ரதத்தால்நேர்ந்த அபாயம் 284:—1922-ம் ஆண்டு கொழும்பிலே மோட்டர்ரதம் மோட்டர்பஸ் முதலியவைகளினால் நேர்ந்த அபாயங்கள் 284. அபாயமடைந்தோருள் 5 பேர் மாண்டனர். இழும் வண்டிகளினால் ஏற்பட்ட அபாயம் 33. மற்றும் வண்டிகளினால் நேர்ந்த விபத்துக்கள் 9. 69 சாரதிகள் கவலையீனமாக ரதஞ்செலுத்தியதற்காக வியாச்சியந் தொடுக்கப்பட்டனர். 357 பேர் வெளிச்சமின்றி ரதங்கள் ஓட்டியதற்காகவும், 45 சாரதிகள் விதிக்கப்பட்ட வேகத்திற்கு மேலான வேகமாக ரதமோட்டியதற்காகவும் வியாச்சியந் தொடுக்கப்பட்டனர். சென்ற வருடம் புகைரதத்தால் நேர்ந்த அபாயங்களையும் உயிர்ச்சேதத்தையும் வெளியிட்டால் நன்றாயிருக்கும்.

மலைப் பாம்பு:—சுழுத்துறைபி லுள்ள ஒரு தோட்டத்திற் கோரமாகத் தெருவழியே ஒருவன் சென்ற வெள்ளிக்கிழமை யிரவு செல்லும்போது மரக்குற்றியென் றெண்ணி ஒரு பொருளில் மிதிக்க, அது நகர, அவன் அஞ்சி யோடி வந்து அத்தோட்டத்தின் அதிபராகிய எதிர் மன்னசிங்கி யென்பவருக்கு, தான் ஒரு மலைப் பாம்பின் மேல் மிதித்ததாகவும், அப்பாம்பு அவருடைய தோட்டத்தை நோக்கியே ஊர்ந்து செல்வதாகவும் சொன்னான். உடனே எதிர் மன்னசிங்கி இன்னுஞ் சிலருடனும், சில வேட்டை நாய்களுடனும் தீபத்தைக் கையிற் கொண்டு தமது தோட்டத்திற்குச் சென்றபோது அப்பாம்பு தன் செட்டையைக் கழற்றிவிட்டுக் கிடக்கதைக் கண்டு அப்பாம்பின் தலையை இலக்காகச் சுட்டார். குடுண்ட பாம்பு சாகாது மயங்கிக் கிடக்கப் பின்னரும் ஒரு சூடு சுடவே பாம்பு இறந்தது. இதன் நீளம் 12 அடி. சுற்றளவு 6 அங்குலம். ஒரு சிங்கள வைத்தியர் இப்பாம்பை உரித்து இதன் கொழுப்பை எடுத்துச் சென்றனர். கொழுப்பு வாத நோய்க்குச் சிறந்த மருந்தாம்.

## பரோடா ராஜகுமாரரின் தேகவியோகம்.

இந்தியாவிலுள்ள சுதேசமன்னர்களாற் பரிபாலிக்கப்படும் நாடுகளிற் சிறந்த பரோடா என்னும் நாட்டைப் பரிபாலித்துவருகின்ற மகாராஜாவின் புதல்வர் ஜர்மனியிலுள்ள பெர்லின் நகரிலிருந்து விளவின் என்னுமிடத்திற்குப் புகைரதமார்க்கமாகச் செல்லும்போது சடுதியில் நோய்கண்டு புகைவண்டியிலேயே உயிர் துறந்தனர். பரோடா மகாராசாவே இறந்துவிட்டனரெனப் பத்திரிகைகளில் வெளிவந்தமை தவறாகும்.

## பரிசளிப்புக் கூட்டம்.

இத்தமீ 12௳ (28—8—23) செவ்வாய்க்கிழமை பகல் 4½ மணிக்கு வட்டுக்கோட்டை கிழக்குச் சைவப்பாடசாலைப் பரிசளிப்புக் கூட்டம் நடைபெற்றது. சபாநாயகராகுப் தெள்ளரவ ஸ்ரீமான். வை. துரைசுவாமி அவர்களை ½ மைல் தூரத்திலிருந்து ஊர்ப் பிரபுக்களும் உபாத்தியாயர்களும், மாணவர்களும் எதிர்கொண்டழைத்துப் பாடசாலையைச் சேர்ந்து 5¼ மணியளவிற் கூட்டம் தேவாரபாராயணத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. பின்பாடசாலைப் பிள்ளைகள். ஆண்பாலார் பெண்பாலார் என்னும் இருபகுதியாரும் மனனப்பிரசங்கங்களும் சம்பாஷணைகளும் பாட்டுக்களும் சபையார் மகிழவும் வியந்துபேசவும் செய்துகாட்டினர். பின் தலைமையாசிரியர் ஸ்ரீ S. A. சின்னையா அவர்களாற் பாடசாலை அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டது. பின் சபாநாயகராற் பரிசுகள் வழங்கப்பட்டன. பின் வட்டு-கிழக்கு ஸ்ரீ அ. தில்லைநாதர் அவர்களும், சங்கரோடை ஆங்கிலேயவித்தியாசாலைப் பிரதமாசிரியர் ஸ்ரீ சபாபதிப்பிள்ளை B. A. L. T. அவர்களும், வட்டுக்கோட்டை சைவாங்கில வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ க. சோமசுந்தரம் அவர்களும், வட்டு மேற்கு பிறக்டர் ஸ்ரீ S. நாகலிங்கமவர்களும், அளவெட்டி சைவவித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ A. W. முருகேசு அவர்களும், மூளாய் சைவபாடசாலையை நடத்தும் ஸ்ரீ சி. கந்தையாபிள்ளை அவர்களும், முறை முறையே எழுந்து தமிழ் ஆவசியகம் கற்றல் வேண்டுமென்றும், பாடசாலைச் சொந்தக்காரருரும் ஸ்ரீ க. முத்துக்குமாரு உபாத்தியாயர் இப்பாடசாலைக்காக 2500-க்கு மேற்பட்ட தொகையைச் செலவழித்தபோது நாமெல்லோரும் ஒத்துழைத்துச் செய்யவேண்டிய உதவிகளை ஆவசியகஞ் செய்தல்வேண்டுமென்றும், பிள்ளைகள் செய்துகாட்டிய மனனப் பிரசங்கங்கள் சம்பாஷணைகள் பாட்டுக்கள் தலைமையாசிரியரின் திறமையை நன்கு விளக்குகிறதென்றும், அவசியம் சிறந்த ஒரு கட்டடம் அமைத்தற்கு எல்லாரும் உதவிசெய்யவேண்டுமென்றும் குறிப்புரை கூறி முடித்தனர். ஈற்றில் சபாநாயகர் எழுந்து பாடசாலையைப் பற்றியும், பிள்ளைகள் செய்த அப்பியாசங்களைப் பற்றியும் தமக்கிருக்கும் ஆனந்தத்தை வாயாற் சொல்ல அளவுபடாதென்றும், தமது கஷ்டத்தைப் பொருட்படுத்தாது ஊக்கமாய்ப் படிப்பிக்குந் திறமை வாய்ந்து இப்போது படிப்பிக்க வந்திருக்கும் தலைமையாசிரியரை ஒருபோதும் இவ்வூரவர்கள் விடமாட்டார்களென்றும், தானும் வற்புறுத்திக் கூறுகிறேனென்றும், இப்பாடசாலையை விடுதிப் பாடசாலையாகவும் உயர்தரமான சைவசமய சாஸ்திரங்கள் கற்கும் பாடசாலையாகவும் கொண்டுவர வேண்டுமென்றும், இவ்வூரவர்களெல்லாரும் ஊக்கமாய் ஒற்றுமை பூண்டு ஒரு சிறந்த பெரிய கட்டடத்தை அமைக்கவேண்டுமென்றும், அதற்காக உதவி செய்பவர்களுள் தானும் இயன்ற உதவி செய்யக்கூடுமென்றும் கூறினர். பின் மானேஜர் சொத்தாரிஸ் ஸ்ரீ அ. சிதம்பரநாதபிள்ளை அவர்கள் சபாநாயகர்க்கும் சபையோர்க்கும் வந்தனங் கூறித் தலைமையாசிரியர்க்கு நன்றியறிதல் சொல்லத் தேவார பாராயணத்துடன் 10 மணி வரையிற் கூட்டம் சமாப்தியாயிற்று.

கடிதம்.

## பிளுங்கின் சமாதான நீதிபதிகளின் வரவேற்கை.

சென்ற 11௳ சனிக்கிழமை கிட்டா வாசிகளாகிய இந்து முஸ்லீம் சகோதரர்கள் மத்தியகிட்டாவாகிய சுங்கைப்பட்டாணியில், பிரபலவயித்தியரும், இலங்கா ஔஷதசாலைத் தலைவரும், யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த காரையம்பதியை ஜெனனபூமியாகவுள்ளவருமான ஸ்ரீ கணபதிப்பிள்ளை முத்துக்குமாரு ஜே. பி. அவர்களையும், இந்திய மாதாவின் புத்திரரும் பிளுங்கில் பிரபல வர்த்தகரும் ஏழைகட்கில்லையெனாது கொடுக்கும் பெருந்தகையாளருமான கனம் சி. அமீன்சாகிப் ஜே பி. அவர்களையும், வரவேற்பு அங்கத்தவர்கள் மேளவாத்தியத்துடன் சென்றழைத்து வரவேற்புக்காகத் தயாரிக்கப்பட்டு நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபத்திற்குச் சென்றார்கள். அத்தருணம் சந்தனம் பனிநீர் பரிமாறப்பட்டபின் ஸ்ரீ தி. சுப்பிரமணியமவர்கள் மேடி கனவான்களுக்கும், சட்டசபை அங்கத்தவர் கௌரவ பி. கே. நம்பியார் அவர்களுக்கும் சபையிலுள்ளோரை அறிமுகஞ் செய்தபின், இந்திய இலங்கா அங்கத்தினரின் அக்கிராசனர் ஸ்ரீ முத்துக்கருப்பன் செட்டியார் எழுந்து, மேடி சமாதான நீதிபதிகளின் குணவிசேடத்தையும், ஏழைகட்குச் செய்யும் உபகாரங்களையும் சபையோர்க்குத் தெரிவித்து இப்பட்டத்தை அளிப்பித்த மாட்சிமைதங்கிய தேசாதிபதி அவர்கட்கு வந்தனங் கூற, கௌரவ பி. கே. நம்பியார் அவர்களை அக்கிராசனாதிபதியாகப் பிரேரிக்க, சர்வசனசம்மதத்தோடு அங்கீகாரம்பெற்றபின் அக்கிராசனருக்கும் நீதிபதிகட்கும் மாலைசூட்ட, அக்கிராசனர் எழுந்து தன்னை அக்கிராசனம்வகிக்கும்படி சபையோர் ஏக மனத்தினராய்க் கேட்டுக்கொண்டதற்கு வந்தனங்கூறி மேற்படி சமாதான நீதிபதிகள் இருவரின் பெருந்தகைமையையும் விரித்துச் சொல்லி இன்றையதினம் பெருமைவாய்ந்த கிட்டா சுல்த்தான் அவர்களின் ஜெனனதினமானதால் இத்தினம் எங்கட்கோர் விசேடித்த தினம் என்றும், சுல்த்தானவர்கட்கும் மேற்படி சமாதான நீதிபதிகள் இருவர்க்கும் தீர்க்காயுளும், சகல சம்பத்துங் கொடுத்தருளும்படி எல்லாம்வல்ல பரம்பொருளை வேண்டுதல் செய்தல் எங்கள் எல்லோர் கடமையென்றும் கூறினர். பின் கனம் வி. வீரகத்திப்பிள்ளை அவர்களாலும், கனம் மாரிமுத்து உபாத்தியாயர் அவர்களாலும், கனம் தி. சுப்பிரமணியம் அவர்களாலும், தனவந்தர் குருசரண்சிங் அவர்களாலும் குறிப்புரை கூறப்பட்டன. பின் சிற்றுண்டி, தேநீர் முதலியன பரிமாறப்பட்டன. ஐந்தரைமணி வரையில் மேற்படி நீதிபதிகள் கௌரவ பி. கே. நம்பியார் அவர்களின் இருமருங்கிலும் அங்கு விஜயஞ் செய்துள்ள ஏனைய கனவான்கள் நிற்க, புகைப்படம் எடுக்கப்பட்டது. கடிதம்.

# இந்திய சமாசாரம்.

## முகம்மது அலியின் விடுதலை.

### எர்வாடா சிறைத்திறவு எங்கே?

### "சிறிய சிறையிலிருந்து பெரிய சிறைக்கு வந்தேன்".

மௌலானாமுகம்மதலி புதன்கிழமை ஜான்சி சிறையினின்று விடுதலை செய்யப்பட்டார். சிறைக் கோட்ட வாயிலில் அவருக்கு நல்வரவு கூறப் பலர் காத்துக்கொண்டிருந்தனர். அவர் வெளிவந்ததும், ஊர்வலத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாண்டுகள் முழங்கின. ஆனால், மகாத்மாஜி சிறையிலிருக்கும்போது, இனிய வாத்தியங்களைக் கேட்கத் தம் செவி விரும்பாதென்று மௌலானா கூறி அதை நிறுத்திவிட்டார்.

### கஸ்தூரிபாய்க்குத் தந்தி.

மௌலானா சிறையிலிருந்து வெளிவந்ததும் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்திக்குப் பின்வருமாறு தந்தி கொடுத்தார்.—

"இன்று விடுதலை யடைந்தேன்; எர்வாடா சிறைச்சாலைச் சாவியைத் தேடிக்கொண்டிருக்கிறேன். ஆண்டவனிடத்தும் என் நாட்டவரிடத்தும் நம்பிக்கைகொண்டிருக்கிறேன்."

### சிறை மாற்றம்.

மௌலானாவின் மகளுக்கு உடம்பு அசௌகரியமாயிருந்தமையால், இவர் முதலிற் செய்திருந்த ஏற்பாட்டின்படி பல இடங்களுக்குச் செல்ல முடியாமல் தில்லி வழியாகப் போவாலி என்ற இடத்திற்குச் செல்கிறார். எவரும் எதிர்பாராதிருந்தபோது இவர் தில்லிக்கு வந்து தமது நண்பர்களை அவரவர்களுடைய வீட்டிற்குச் சென்று தரிசித்துச் சென்றார். அசோசியேட்டட் பிரஸ் நிருபரிடம் இவர் கூறியது வருமாறு:—

"நான் புதிதாக ஒன்றுஞ் சொல்வதற்கில்லை. நான் ஒரு சிறிய சிறையிலிருந்து பெரியசிறைக்குள் செல்ல விடுதலை செய்யப்பட்டேன். மகாத்மாவைச் சிறையிலிருத்திவிட்டு நான் வெளிவந்தமைக் குறித்து எனக்குச் சிறிதும் சந்தோஷமேயில்லை. மகாத்மா விடுதலை செய்யப்படும் வரைக்கும் நான் சும்மாயிருக்க மாட்டேன். என்னுடைய அரசியல் விஷயத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. நான் எந்த நோக்கத்தோடு சிறை சென்றேனோ அந்த நோக்கத்துடனே தான் திரும்பிவந்திருக்கிறேன். மகாத்மாவின் ஒத்துழையாத் திட்டத்தையும் இந்து முஸ்லீம் ஒற்றுமையையும் நான் பின்பற்றியே தீருகிறேன். என் நாட்டவரை ஒன்றுசேர்க்க என்னால் முடியாவிட்டால், என் காரியத்தில் நான் தோற்றுப்போய்விட்டேன் என்றுகருதுவேன்"

### சந்தோஷச்செய்திகள்.

மௌலானா விடுதலையானதைக் குறித்து இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் ஐரோப்பா முதலிய வெளிநாடுகளிலிருந்தும் கணக்கற்ற சந்தோஷச் செய்திகள் அவருக்குவந்துகொண்டிருக்கின்றன. கனம் ஹைய்த்ராலா அலி, மௌலானாவுக்கு விடுத்த தந்தி வருமாறு:—

"நல்வரவு கூறுகிறேன். மகாத்மா இல்லாததினால் நாட்டில் பிளவுகள் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. இச்சமயத்தில் உங்களுடைய பொறுப்பு அதிகமாயிருக்கிறது. எப்பொழுதும் போல் தைரியமாயிருங்கள். நாட்டிற்கும் இஸ்லாத்துக்கும் சரியான வழி காட்டுங்கள். சட்டசபைப் பிரவேசத்திற்கு விரோதமாக உலேமாக்கள்விடுத்த பத்வாவைவாபீஸ்செய்துகொள்ளச் சொல்லுங்கள்."

இதற்கு மௌலானாவிடுத்த பதில்வருமாறு:- "உங்களுடைய செய்திக்கு வந்தனம். ஆண்டவனுக்கும் கடவுளுக்கும் நான் செய்யவேண்டிய கடமை மிகஅதிகம். நான் இரண்டு வருடமாக இராதிருந்த காலத்தில் ஏற்பட்டமாறுதல்களை நான் அறிந்து கொள்ளாத இந்த நிலையில் என் கடமையைச் சரியாகச்செய்ய ஆண்டவன் எனக்குத் தைரியம் அளிப்பானாக. இப்பொழுதுள்ள வேற்றுமைகளைக் குறித்து உங்களைப்போல் நானும் வருந்துகிறேன். உலேமாக்களின் பத்வா விஷயம் வேறு விதமானது. இஸ்லாம் சட்டப்படி, இரண்டு வருடத்திற்கு முன் ஒத்துழைப்பது பாபச்செயலானால், ஜஸீரத்துல் அரப் முதலிய புண்ணிய ஸ்தலங்கள் முஸ்லீம் ஆதிக்கத்துள் ஏற்படாத இந்த நிலையில் ஒத்துழைப்பது புண்ணியமாகிவிடுமா? இந்த இஸ்லாம்மத விருப்பங்களுக்கு இணங்கும்படி, நான் இல்லாத காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரைத் தாங்கள் தூண்டி ஏதேனும் நன்மை அடைந்தீர்களா?

### சுதந்திரத்திற்காக உயிரைவிடச் சித்தம்.

மௌலானா மகம்மதலி விடுதலை யடைந்ததும் முதன்முதலாக ஜான்சியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். அதில் ஒரு பகுதி வருமாறு:—

எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் ஒவ்வொருவரும், காரியக் கமிட்டி அங்கத்தினர் ஒவ்வொருவரும், நாடு சுதந்திரம் பெறுவதற்காகத் தம் உயிரையும் விடச் சித்தமாயிருப்பதாக ஒரு வாக்குறுதிப் பத்திரத்தில் கையெழுத்திடவேண்டுமென்று விசேஷ காங்கிரசில் நான் ஒரு தீர்மானங் கொண்டுவரப் போகிறேன். லாசேன் உடன்படிக்கையினால் கிலாபத் விஷயம் முடிவு பெற்றதாகக் கருதிவிடக்கூடாது. —நவசக்தி.

## ஸ்ரீமதி பங்கஜம்.

### வழக்கு முடிந்தது.

ஸ்ரீமதி பங்கஜத்தின் சகோதரன் சகோதரி முதலியோரின் மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்கு திருநெல்வேலி சப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நேற்று (14ந்தேதி)வியாழக்கிழமை கடைசி முறையாக விசாரிக்கப்பட்டது. பாதிரிமார்கள் சங்கத்தார், இவர்கள் மீது தொடுத்திருந்த வழக்கை வாபீஸ் வாங்கிக்கொண்டு விட்டதனால், இவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர்.

# கடிதம்.

## "தந்தைதாய்பேண்".

அன்பார்ந்த சகோதரிகளே!

இப்பூவுலகின்கண் நாம் முன் கண்ட தெய்வம் நம் தாய் தந்தையரே. தாய் தந்தையர் நமக்குச் செய்த உதவிக்கு, நாம் எவ்விதப் பிரதியுபகாரஞ் செய்தாலும் அவர்கள் ஒரு நாட் பட்ட பாட்டிற்கு ஈடாகாது.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமு மாற்ற லரிது".

நாம் எத்தகைய துன்பங்களை விளைவித்தாலும், நமது தாய் தந்தையர் அப்பொழுதே அத்துன்பங்களை மறந்து, நம் சுகத்தையே விரும்புகிறார்கள். அவ்விதம் நம்மை யன்புடன் காப்பாற்றும் தாய் தந்தையரையே நம் முன் அநேகர் இகழ்ந்து அலக்ஷியம் செய்கிறார்கள் என்றால், மற்றவர்களிடம் எவ்விதம் நடப்பார்கள் என்பதைக் கூறவும் வேண்டுமா?

நாம் இவ்விதம் நம் பெறறோரிடம் நடந்துகொள்ளலாகாது. அவர்கள் மனதை வருத்தப்படுத்தினால் நாம் உய்யும் வழி வேறில்லை. தாய் தந்தையரிடம் மிகவும் பயபக்தியுடன் நடந்துகொள்ளல்வேண்டும். அவர்கள் மனதைத் திருப்திசெய்யாது, மற்றும் எவ்வித தான தருமங்களைச் செய்தாலும், அவை நமக்குப் பயன்படா. பெற்றோர்களிடம் எப்போதும் பயபக்தியுடனும், அவர்கள் புத்திமதிப்படியும், நடப்போமாகில் இம்மையிற் புகழையும் மறுமையிற் புண்ணியத்தையும் அடைவோம். தாய் தந்தையர் நம்மை வளர்க்கும் பொருட்டு அநுபவித்த கஷ்டத்தை உள்ளபடி கூற நம்மாலியலாதாயினும் சிறிதளவு கூறுகிறோம். தகப்பனார் நமக்காக எவ்வளவு பிரயாசைப்படுகிறார். நாம் பசி நோயால் வருந்தாமலும், உடுப்பதற்கு வஸ்திரமில்லையெனத் தவிக்காமலும், நாம் படித்து மேன்மேலும் நற்பெயர் எடுத்தல்வேண்டுமென்றும் எண்ணத்தாலும், வெயில் பனி மழை தேகசுகம் முதலியவைகளையுஞ் சவனியாது, மிகவும் பிரயாசைப்பட்டுப் பொருள் சம்பாதிக்கிறார். நாம் நோயால் வருந்தும்பொழுது வைத்தியரை யழைத்துவந்து நம் நோய்க்குத் தேவையான மருந்துகளைப் பெற்றுத் தருகிறார். நமக்குத் தேவையான பொருட்களை நாம் மனமகிழும்படி தமது இயல்புக்குத் தக்கவிதம் வாங்கித் தருகிறார்.

தந்தையைப் பார்க்கிலுந் தாயே நமக்காக மிகவும் பிரயாசைப்படுகிறார். நாம் சிறு பிள்ளையா யிருக்கும்பொழுது நம்மைப் பசியினால் வருந்த விடாது நேரத்திற்கு நேரம் போசன மூட்டுகிறார். நாம் அப்போசனத்தையுண்ணாது விளையாட்டுப் பராக்கிலிருந்தால் நம்மைத் தூக்கித் தம் இடுப்பில் வைத்துக்கொண்டு அங்கு மிங்கு முலாவி யப்போசனத்தை யுண்ணச் செய்கிறார். தாம் அன்னபானத்தையும் மறந்து, நமக்காகப் பத்தியங் காத்து, நித்திரை விழித்து நாம் எப்போது சுகப்படுவோமென ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார். நாம் அழுதால் நம்மை அழும்படி விடாது பராக்குக் காட்டித் தாலாட்டி நித்திரையாக்குகிறார். இவ்விதமெல்லாம் நம்மைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்துவந்த நம் தாய்தந்தையரை நாம் இழந்ததன்னில், இதைவிடநாம்செய்யக்கூடிய பாவம் இவ்வுலகில் வேறென்ன இருக்கிறது?

ஆதலால் சகோதர சகோதரிகளே, நம் தாய் தந்தையர் நமக்கோர் கட்டளையிட்டால் அக்கட்டளையை நிறைவேற்றியபின்பே மற்றைவேலைகள் செய்தல்வேண்டும். நாம்நம்தாய்தந்தையரிடத்தில் உண்மை யன்புடையவர்களாகவும் கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும் நடந்துகொள்ளல் வேண்டும். அதுவே நமக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மையைத்தரும்.

அந்தோ! இந்நாட்களில் தம்பெற்றோர் முதியவராயிருந்தால் ஏழைகளாயிருந்தால் கல்வி கற்காதவராயிருந்தால் நம்முன் அநேகர் அவர்களைத் தங்கள் பெற்றோரெனக் கூறவும் கூசுகிறார்கள். இஃதும் கலிகாலக் கொடுமையும் தற்கால நாகரீகமுமே.

சகோதரிகளே, விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றுள்வீழ்வதுபோல், நாம் எதற்காக அந்நியநாகரீகத்தில் மயங்கிக் கிடைத்தற்கரிய தாய்தந்தையரின் மனதையும் புண்படுத்தி, நாமுங் கெட்டுப் பிறரையும் கெடுத்து, இம்மை மறுமைப்பயன்களையுங் கெடுத்துக்கொள்ளல் வேண்டும்? நல்வழியே நடப்பதற்குப் பதிலாகத் தீவழியே ஏன் நாம் நடத்தல்வேண்டும்? அதனால் நாமடையும் பிரயோசனம் யாது? அந்தோ! நம்முட் சிலர், உத்தியோக பதவியிலிருப்பவர்கள், தங்கள் தாய் தந்தையர் பழைய பழக்க வழக்கங்களை யுடையவர்களா யிருந்தால் தங்கள் வீட்டுச் சமையற்காரர் வேலைக்காரராகப் பாவிக்கிறார்கள். வேறு யாரும், இவர்கள் யாரெனக் கேட்டாலும் அவ்விதமே விடையளிக்கிறார்கள். சிலபெண்களும் அவ்விதமேசெய்து கொள்ளுகிறார்கள். தாங்கள் சிறிது ஆங்கிலேயங் கற்றுவிட்டால் விண் மண் தெரியாது, நாற்காலிகளிலுட்கார்ந்துகொண்டு தம்தாய்தந்தையரை அலட்சியஞ் செய்கிறார்கள்.

அங்கமெலாம் நொந்து பெற்று அன்புடன் ஆதரித்த தாயையும் தந்தையையும், சமையற்காரரெனவும் வேலைக்காரரெனவும் சிறிதேனும் மனங்கூசாது கூறுபவர்கள் எவ்வித நரகக்குழியில் வீழ்ந்தழுந்துவார்களோ அறியேம். இவையெல்லாம் நம்குற்றமல்ல. 'தற்கால நகரீகம்' என்னும் மாயப் பசாசின் கொடிய செயலே.

இங்ஙனம்,
க. நவரத்தினஅம்மாள்,
வண்ணார்பண்ணை.


# சருவஞானோத்தர ஆகமம்.

## ஞானபாதம் தமிழ் மூலமும் முத்திரத்ந விருத்தியும்.

இது ஸ்ரீகண்டபரமேசுவரரால் ஸ்ரீசுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவ சித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டியோர் நம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0.
தபால் சார்ஜ் வேறு.

ஒரே முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப் பெறும்.

இங்ஙனம்,
பொ முத்தையபிள்ளை,
சிவாகம சங்கம்,
(H. 20) தேவகோட்டை.

## பெண்கள் முன்னேற்றமும் ஸ்ரீ சிவக்கொழுந்து அவர்களும்.

இந்துசாதனம் 16-ம் இலக்கப் பத்திரிகையில் ஸ்ரீ சிவக்கொழுந்து அவர்கள் ஒரு அரிய விஷயம் எழுதியிருந்தார்கள். அது பொருட்சுவையிலன்று, சொற்சுவையினும் மிக்கது. ஸ்ரீமதி மங்களம்மாளது ஒவ்வாக் கூற்றை, பருத்தித்துறை நா.தா.ச. கண்டித்தது பெரிய பாதகச்செயலாகுமென்று கருதி அவரைக் கண்டிக்கப் புகுந்து தம்மைப் பிறர் கண்டிக்குமாறு சில எழுதி நமது பெண்களுக்கு இல்லாத ஒரு வசையை உண்டுபண்ணப்பார்க்கிறார். ஸ்ரீ சிவக்கொழுந்து அவர்கள் நமது பண்டை வழக்கங்களை நன்கறியாது கண்டனமெழுதப்புகுந்தும், புகுந்து நமது பெண்களுக்கென்று முன்னோர் செய்துவைத்துப்போன நியமாசாரங்களும் ஒழுக்கங்களும் அவர்களை 'உலகத்தில் மிகச் சீர்திருந்தினவர்கள் இவர்களே' என்று எக்காலமும் எத்தேசத்தினரும் புகழுமாறிருக்கவும் அவற்றை யறியாது சில இந்திய மாதர்களுடைய கொள்கைகளைப் பின்பற்றித் தமது குலாசாரத்தை மறந்து சீர்திருத்தமாவது பிரசங்கம் பண்ணுவதும் சங்கங்கள் தாபிப்பதும் சுயராச்சியம் வேண்டுவதுமே என்னும் நவீன நோக்கங்களையுடைய ஸ்ரீமதி மங்களம்மாள் கொள்கையை ஆதரிக்க நினைந்ததும், இந்தியாவுக்கு வந்த எத்தனையோ ஐரோப்பியர் நமது பெண்களது பெருமையை எடுத்துக் கூறுமிடத்து, பெண்கள் தங்களுக்கென்று விதிக்கப்பட்ட விதிகளைச் சரிவரஅநுட்டிக்கிறமையினாலேயே இந்தியர் தங்களை இப்பொழுதும் இந்தியர் என்று சொல்லுகிறார்கள் என்று எமது பெண்களைப் புகழ்ந்து போயதைச் சிறிதும் நினையாது, ஐரோப்பிய பெண்களின் நோக்கங்களையே நமது பெண்களுக்கும் புகட்டி இவர்களையும் அவர்களைப்போல ஆண்மாரிகளாகவும், ஆடவர் சொற்கடங்காதவர்களாகவும் வரப்பண்ண வழிகாட்டுவோர்க்குத் துணைநின்று நமது இல்வாழ்க்கைச் சிறப்புக்குக் கெடுதிவிளைக்க நினைத்தும் எவ்வளவு அறியாமை! எத்தனையோ பெண்கள் கல்விகற்று மிகச் சீர்திருந்தி இல்வாழ்க்கைக்குரிய பணிகளையும் வீட்டுவேலைகளையும் மறந்து கதிரையின்மேலே காலின்மேல் கால்போட்டுக்கொண்டிருந்து விளக்குமாறு பிடித்து வீடு பெருக்கக் கூசுபவர்களாய் அடுக்களையிற் பிரவேசியாதவர்களாய் விளங்குவதை யாவர் அறியார். இவர்களிற் சிலர் பெண்கள் படிப்பது சீர்திருத்தத்திற்கு ஏதுவாகும் என்றும், நாயகனது கடமைகளைச் செய்யவும் பிள்ளைகளுக்கு நல்லபழக்கம் பழக்கவும் உதவியாகுமென்றுஞ் சொல்லுகிறார்கள். படிக்காத முற்காலப் பெண்கள் தங்கள் நாயகருக்குச் செய்த கடமைகளைப்போல, படித்த இக்காலப் பெண்களிற் செய்பவர் எத்தனைபேர்? 'சீர்திருந்தாத' அந்தக்காலத்திருந்த சீதை சாவித்திரி தமயந்தி போன்ற ஒரு பெண் சீர்திருத்தத்தின் கல்வியறிவு மேம்பட்ட இக்காலத்திற் பிறவாமற்போனதற்குக் காரணம் என்ன? ஐரோப்பிய நாகரிகத்தைத் தழுவி நமதுபெண்கள் கற்குங் கல்வியே காரணமாகும். இனி நமது பெண்கள் படித்தமையினால் அடைந்த பிரயோசனங்கள் எவையோ? தங்களிஷ்டப்படி நடக்கத் தொடங்குவதும், எமது புராதன ஆசாரங்களை மறந்து நவீன நகரிகத்தை நாட்ட நினைப்பதும், கோப்பை கொண்டா பீங்கான் கொண்டா, என்று தமது நாயகரை நெருக்குவதும், பிள்ளைகளைப் பிரசவித்தற்குரிய தேகவலிமை இழந்தவர்களாய்விளங்குவதுமே பெண்கல்வியினால் விளைந்த பிரயோசனங்கள். பெண்கள் படிக்கத் தொடங்கினமையினாலேயே எங்களுள் ஒருகாலமும் இல்லாத (Divorce Cases) டைவோர்ஸ் கேசுகள் அதிகப்பட்டுக்கொண்டன; வீட்டுக்குவீடு 'ஆயாள்'மார் அதிகப்பட்டுக்கொண்டனர்.

பெண்களுக்கு நற்பழக்கம் உண்டாவதற்குப் பள்ளிக்கூடக் கல்வி அவசியமில்லை. நல்ல சற்குணத்தோடு பெற்றார் பிள்ளைகளைப்பெற்றிருந்தால் அப்பிள்ளைகளுக்கு நற்பழக்கம் ஒருவர் பழக்காமலும் படிப்பியாமலும் தானே வலிய வரும். Dr. Marie Stopes என்னும் ஐரோப்பிய மாதின் கருத்தும் இதுவே. பள்ளிக்குச் செல்லாது தாயுடனே வீட்டிலிருந்து அவள் தனது நாயகனுக்குச் செய்யும் கடமைகளைப் பார்த்து வருதலே ஒரு பெண் கணவனுக்குச் செய்யுங் கடமைகளை அறியக்கூடிய நல்லவழி. தாயானவள் என்ன செய்கிறாளோ அதனைக் கண்ட மாதும் அப்படியே செய்வாள். தாயுடனே யிருந்து இக்கடமைகளையும் வீட்டு வேலைகளையும் பழகாது காலம் முழுவதையும் பள்ளியிலே கழித்துவிட்டு விவாகஞ் செய்யும் பருவம் வந்தடுத்தும் கல்வியை விடாது கற்று, இல்வாழ்க்கைக்குரிய பணிகளொன்றும் அறியாதவளாய் விவாகஞ்செய்து ஒரு பெண் அநுபவிக்குங் கஷ்டம் சொல்லிமுடியாது. இப்படிப்பட்ட கல்வியினால் பெண்ணுக் கென்னசுகம்; படிக்க விடும் பெற்றாருக் கென்னசுகம்; அவளை மணம்புரியும் நாயகனுக் கென்னசுகம்? சில பெண்கள் பண்டிதசோதினை பாசுபண்ணியிருக்கிறார்கள். சிலர் சீனியர் ஜூனியர் சோதினை பாசுபண்ணியிருக்கிறார்கள். இக்கன்னியாரத்தினங்கள் காந்தியின் போதனைப்படி நூல் நூற்றுச் சேவியாபாரஞ்செய்யும் ஆடவர்களை மணம்புரியவும் அவர்களுக்குச்செய்யுங் கடமைகளைச் சரிவரச் செய்யவும் உடன்படுவார்களா?

ஐரோப்பியநாகரிகந்தலைகாட்ட எத்தனையோ பல்லாயிர வருஷங்களுக்கு முன்னிருந்த பெண்கள் எப்படி நடந்தார்கள். நமக்கு முன்மாதிரி காட்டிவிட்டுப் போனவர்கள் அவர்களன்றி இப்போதை ஐரோப்பிய மாதர்களல்ல. ஐரோப்பிய பெண்களைப்போலப் பிரசங்கம் பண்ணவும், சங்கங்கள் தாபிக்கவும் நாங்களும் புறப்படுவோமாகில் எங்களுக்கென்று விசேஷமாகச் சொல்லப்பட்ட நாணம் எங்கே, மடமெங்கே, அச்சம் எங்கே, பயிர்ப்பு எங்கே. எமது ஆன்றோர்கட்டிவைத்த வரம்பு கடந்தால் எம்மை மதிப்பவர் யார்? நமக்கு அதிகாரமில்லாத விஷயத்தில் நாம் பிரவேசிப்பானேன். பிரவேசித்து இவ்வளவில்லங்கப்படுவானேன். ஆப்பிழுத்த குரங்கின் கதியே நமக்கும் வருமென்றறிந்து எமக்குரிய வீட்டுவிஷயங்களிலே காலத்தைக் கழிப்பதுவே புத்தி.

பெண்களுக்கும் இராச்சிய விஷயத்துக்கும் தூரம் மிகஅதிகம். நம்முன்னோரைப்போலவினைக்க நினைக்கும் இவர்களுக்கு இந்தப் பயித்தியம் ஏன்? எமது பூர்வீக பெண்களில் தமது வீட்டுக் கருமங்களையும், நாயகன் மாமன் மாமி முதலியோருக்குச் செய்யுங் கடமைகளையுஞ் செய்யாது, இராச்சியவிஷயத்திலும் பெண்கள் முன்னேற்றவிஷயத்திலும் பிரவேசித்தவள் எவள்?

பெண்களுக்கு வீட்டிலே யிருந்து இல்லற தருமங்களை நாயகனோடு கூடி நடத்த அதிகாரமுண்டொழிய வெளியே திரியவும், பிரசங்கஞ் செய்யவும் அவர்களுக்கு அதிகாரமில்லை. சாவித்திரி அருந்ததி முதலியோருடைய பெயர் மங்காது இன்னும் நிலவுதற்குக் காரணம் அவர்களுடைய பதிவிரதாதர்மமேயொழிய கல்வித்திறமையுமல்ல பிரசங்கமாரி பொழிவதுமல்ல என்பதை நமது கடிதர் சிந்திக்கக்கடவர். இப்போது பெண்கள் கல்விகற்று நினைத்தபடிப்புக் கொண்டு அரங்கத்திலேறப் புறப்பட்டமையினாலேயே சாவித்திரி தமயந்தி வாசுகிபோன்றஒரு பெண்களையுங் காணோம். இனியாவது நமது பெண்கள் சாத்திரவிதியைமீறநினையாது அவற்றிற் கடங்கி ஒழுகக்கடவர்கள்.

இனி, பெண்களுக்குச் சங்கங்களேன்? பிரசங்கங்களேன்? பத்திரிகைகளேன்? முற்காலப் பெண்கள் இவற்றை நினையாது தமது வீட்டுவிஷயங்களிலேயே கண்ணுங் கருமமுமா யிருந்தது அவர்களது சீர்திருத்தக்குறைவுபோலும். ஆடவர் கூடிய சபையிலே பெண்கள் வெளிப்பட்டுப் பிரசங்கஞ் செய்ய ஒரு நூலும் இடங்கொடுக்கவில்லை. தம்மைப் பிறர்கண்டு விழையுமாறு காணப்படுதல்தானும் கற்புக்குப் பங்கத்தைச் செய்யும் என்று புறச்சமய நூலாகிய மணிமேகலையுங் கூறுகின்றது.

எமது பழைய வழக்கங்களை அநுசரிக்கவேண்டுமென்னும் நோக்கம் நமது பெண்களுக்கு இருக்குமாயின் ஆன்றோர் வழக்கிற்கு மாறான பிரசங்க முதலிய நமக்கு வேண்டியதில்லை.

சரஸ்வதி கல்விக்கும் இலட்சுமி செல்வத்துக்கும், துர்க்கை யுத்தத்துக்கும் தலைவிகளாக இருந்தனர் என்று கடிதர் கூறுகிறார். நல்லது ஸ்ரீ சிவக்கொழுந்து அவர்கள், துர்க்கை யுத்தத்துக்குத் தலைவியா யிருந்தமையினால் பெண்கள் இனிப் போர்க்கோலங்கொண்டு யுத்தத்துக்குச் செல்ல விரும்புகிறார்போலும்! இவர்கள்தாம் நமது குலாசாரத்தைக் காப்பாற்றி நமது பூர்வீக பெண்களது நியமாநுஷ்டானங்களை நிலைநாட்டுபவர்கள்!!

பெண்கள் முன்னேறவேண்டுமானால் தமக்கு விதிக்கப்பட்ட தர்மத்துக்கு மாறின்றி நடக்க வேண்டும் ஆடவர்செய்கிறவேலைகளிற் பெண்கள் பிரவேசிக்கவேண்டிய அவசரமில்லை. பெண்கள் இப்படியே தமக்கடாத விஷயங்களிற் பிரவேசிப்பதைக் கண்டு ஒருவர் "Let us be warned in time because when women burn their boats they will do so in a more thorough and unregretting fashion than we can or will ever do" என்று கூறினார். ஒரு தேசத்தின் ஏற்றத்துக்கும் தாழ்வுக்கும் பெண்களும் காரணராவர். நமது தேசத்தில் அருந்ததி சீதை முதலிய கற்புடைமகளிர்வந்து பிறந்திராவிடின் நாம் இவ்வளவு பெருமையடையமாட்டோம். அவர்களைப்போலவே நமதுபெண்களும்ஒழுகி அவர்கள் தேடிவைத்த அழியாப் புகழை நிலைநிறுத்தக்கடவர்.

வண்ணார்பண்ணை, இங்ஙனம்,
30—8—23. ம. சுந்தரம்,

[நமது கடித நண்பர் பெண்கள் கற்பதனால விளைவது தீமையன்றி நன்மையில்லையென்னுங் கருத்தமையத் தமது வியாசத்தின்கண்ணே இடையிடையே கூறியிருக்கின்றார். பெண்களாயுள்ளார் கற்க வேண்டிய முறைப்படி நமது செந்தமிழ்ப் பாஷையைக் கற்பதனால் நன்மையன்றி எவ்வாற்றானுந் தீமையில்லையாமென்பது இக்காலத்துள்ள அறிவாளிகள் கொண்ட அபிப்பிராயமாகும் —பத்திராசிரியர்.]


## ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.
### (Standard Tiles.)

இவை வெறேக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்பவேன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டின் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையுங் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

M. S. MAIDEEN ABDULKADER MARICAR,
& Doctor, T. N. SAMIPILLAI & Co.
MUHIADEEN MEDICAL HALL,
PORTO-NOVO, S. A. Dt.

எனது அன்பர்களே. எனது அன்பர்களே.
சற்று கவனியுங்கள். சற்று கவனியுங்கள்.
இனும்! இனும்!!

இந்த லேகியம்போல் பிற வைத்தியர்கள் செய்து கொடுக்கும் பக்ஷத்தில் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

## சிட்டுக்குருவி வீரதத்துவ லேகியம்.

எனது அன்பர்களே, சிட்டுக்குருவி லேகியமென்று சிலர் செய்து விற்கிறார்கள். அதாவது நரம்புகளுக்குத்தான் கொஞ்சம் வலுவைக்கொடுக்கும். இந்த லேகியம் அப்படியல்ல; எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்; இந்த வீர தத்துவ லேகியத்தினுடைய மகத்துவம் புசித்தவர்களறிவார்கள், இந்த லேகியமானது செய்யும் முறையும் பாகமும் தற்காலம் ஒருவரும் செய்தும் அறிந்துமிரார்கள். அதாவது சித்தர்கள் பெரியோர்கள் பெரிய பெரிய நாதாக்களுடைய செய்யும் முறை சுல்த்தான்கள் ராஜாக்கள் செய்து சாப்பிடும் வீர தத்துவம் தங்கிய லேகியம். தங்கம் குங்குமப்பூ கஸ்தூரி அம்பர் பவளம் முதலிய சீவசத்துக்களைக்கொண்டு சேகரிக்கப்பட்டது. இந்த லேகியமானது 1008 நரம்புகளுடைய வியாதிகளையும் சுத்தப்படுத்தி மேகவெட்டை மேகச்சூடு மேகநாங்கை முதலியவற்றை நீக்கும். எங்கள் கம்பெனி மருந்தை ஒருமுறை தருவித்துச் சாப்பிடும் பக்ஷத்தில் தங்கள் ஆயுள் பரியந்தம் கைவிடமாட்டார்களென்பது நிச்சயம்.

40 நாள் ஒரு மண்டலம் டப்பி 1க்கு ரூ. 10—0—0
20 நாள் அரைமண்டலம் டப்பி 1க்கு ரூ. 6—0—0
V. P. சார்ஜ் பிரத்தியேகம் 0—0—0

லேகியம் சாப்பிடும் முறை லேகியத்துடன் அனுப்பப்படும்.

N. B. வியாதியுள்ளவர்கள் டாக்டர் நேரில் பார்க்கவும். எங்கள் கம்பெனியில் எல்லா விதமான லேகியங்களும் மாத்திரைகளும் தைலங்களும் திராவகங்களும் பஸ்பங்களும் சகாய விலைக்குக் கொடுக்கப்படும்.

சிங்கப்பூர் பினாங் மலாய் எஸ்டேட்களுக்கு மருந்துக்கிரயமும் தபால்செலவுக்காக ரூ. 2ம் முன்னதாக மணிஆடர் அல்லது ரிஜிஸ்டர் மூலமாக அனுப்பவேண்டியது. அப்படி அனுப்பாவிட்டால் அனுப்பப்படமாட்டா.

எங்களுடைய கம்பெனிக்கு கமிஷன் ஏஜண்டு தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

(தந்தி விலாசம்—முகையதீன்).

மானேஜர்: எம். எஸ். மெய்தீன் அப்துல்காதிர் மரைக்காயன்,
& டாக்டர் டி. என். சாமிப்பிள்ளை & கோ,
முகையத்தீன் மெடிக்கல் ஹால்,
பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

எங்கள் சோல் ஏஜண்டு:
P. செல்லையா ஐயர்,
கொத்தமல்லி ரோட்டு,
லாவஸ்பட்டி போஸ்ட், சிலோன்.

(Y. 20)

## தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் தீராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
(H. 16.) தொண்டமானாறு.

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கோடுக்கும்!!

### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.
### புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4-0-0 20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும். தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

### மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

### மூலத்திற்கு குருநாகபஸ்பம்

ஆப்ரேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாத முள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### இருமலுக்கு குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், சோளை, சுபக்கட்டு இவைகள் எவ்வளவுநாட்பட்டதாயிருந்தாலும்சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

### பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நீற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மெடல்கள் பெற்ற
C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.